**தேதி :** 02.12.2025 **SC.No. :** 303/2023 PW :**4** ராஜேஷ்

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

அ.சா.1 என்னுடைய உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். இடப்பிரச்சனை சம்பந்தமாக காவல்ஆய்வாளர் என்னிடம் ஆவணங்கள் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். இடப்பிரச்சனை காரணமாக எதிரிகளுக்கும், அ.சா.1 க்கும் பிரச்சனை இருந்தது என்று நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 06.07.2021 ம் தேதி காலையிலிருந்தே பிரச்சனை நடந்தது என்று நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் எனது அண்ணனிடம் "நீ எதற்கு இங்கு வந்தாய், உனக்கு இதில் என்ன சம்பந்தம், தேவடியா மவனே" என்று அசிங்கமாக அருள்முருகனிடம் பேசினார் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. "இத்தோடு நீ செத்து ஒழி" என்று போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை தடுத்தேனா? என்றால் சம்பவத்தை பார்த்து என்னுடைய அண்ணனின் கையில் இரத்தத்தை பார்த்தவுடன் பதற்றமாகி விட்டேன். நான் இவ்வாறு போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அருள்முருகன் திலீப்பின் இடது கையில் அரிவாளால் வெட்டினார் என்று சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. அருள்முருகன் அரிவாளை ஓங்கி காண்பித்தார் என்று சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. தங்கபுஷ்பத்தின் வீட்டிற்கு மேல்புறம் சின்டெக்ஸ் தண்ணீர்தொட்டி உள்ளது என்றால் சரிதான். அதன் சாவி தங்கபுஷ்பத்திடம் இருக்கும் என்றால் சரியல்ல. சக்தி, பூபதி, தங்கபுஷ்பம் ஆகியோர்களிடம் சாவி மாறி மாறி இருக்கும். எதிரிகளின் பூர்விகம்

ரெட்டியார்பட்டி என்றால் நான் பிறந்தது முதல் அவர்கள் எங்கள் ஊரில் பக்கத்து வீட்டில் தான் குடியிருந்து வருகிறார்கள். எதிரிகள் குடும்பத்தார் தண்ணீர் தொட்டியில் தண்ணீர் பிடிப்பது சம்பந்தமாக இருந்த முன்விரோதத்தின் காரணமாக தீலிப் என்பவருக்கு வாகன விபத்தில் ஏற்பட்ட காயத்தை பயன்படுத்திக்கொண்டு, அ.சா.1 பொய்யாக புகார் கொடுத்ததின் பேரில், அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தீலிப்பிற்கு ஏற்பட்ட காயத்திற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.12.03 11:29:26 +0530

**தேதி :** 02.12.2025 **SC.No. :** 303/2023 PW :**5** அனிதா

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

தங்கபுஷ்பம் என்பவர் வீட்டிற்கு மேல் சின்டெக்ஸ் தொட்டி உள்ளது என்றால் சரிதான். சின்டெக்ஸ் தொட்டிற்கும், எதிரிகளின் வீட்டிற்கும் இடையே தென்வடல் தெரு மற்றும் தங்கபுஷ்பத்தின் வீடும் உள்ளது என்றால் சரிதான். எதிரிகளின் வீட்டிற்கு தென்புறம் தான் கிழமேலாக ஒரு பொதுபாதை உள்ளது என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் கூறிய எதிரி அருள்முருகன் என்பவர் அரிவாளால் ஜெயக்குமாரின் இடது கையில் வெட்டினார் என்று சொல்வதும், லிங்கச்சாமி திலீப்பை பிடித்துக்கொள்ள எதிரி அருள்முருகன் அரிவாளால் இடது முழங்கையில் வெட்டினார் என்றும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் பற்றி நான் காவல்துறைக்கு தொலைபேசியின் மூலம் தகவல் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். எதிரிகள் கெட்ட வார்த்தைகள் பேசினார்கள் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல், சொன்ன தேதியில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், ஜெயக்குமாருக்கும், தீலப்பிற்கும் ஏற்பட்ட காயத்திற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. ஜெயக்குமார் மற்றும் திலீப்பிற்கு இருசக்கரவாகனங்கள் உண்டு என்றால் சரிதான். எதிரிகள் குடும்பத்தார் தண்ணீர் தொட்டியில் தண்ணீர் பிடிப்பது சம்பந்தமாக இருந்த முன்விரோதத்தின் காரணமாக தீலிப் என்பவருக்கு வாகன விபத்தில் ஏற்பட்ட காயத்தை பயன்படுத்திக்கொண்டு, அ.சா.1 பொய்யாக புகார் கொடுத்ததின் அடிப்படையில் அ.சா.1 எனது

கணவரின் உடன் பிறந்த சகோதரர் என்பதினாலும், அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தீலிப்பிற்கு ஏற்பட்ட காயத்திற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.12.03 11:29:36 +0530